

# வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான வழிகாட்டி நூல்

# বিদেশী কর্মীদের জন্য একটি নির্দেশিকা

MINISTRY OF
MANPOWER


Ministry of Manpower
18 Havelock Road
Singapore 059764
www.mom.gov.sg

# உள்ளடக்கம்


சிங்கப்பூருக்கு உங்கள் வரவு நல்வரவாகுக 02
இந்த வழிகாட்டி நூல் பற்றி 03
சிங்கப்பூரில் வேலை செய்தல் 04
வேலை அனுமதி நிபந்தனைகள் 06
முகமைக் கட்டணங்கள் 08
வேலை வாய்ப்புச் சட்டங்கள் 10
பாதுகாப்பு என்னிடமிருந்து தொடங்குகிறது 13
சிங்கப்பூர் சட்ட விதிகள் 15
சிங்கப்பூரின் உள்ளூர் பழக்க வழக்கங்கள் 19
சிங்கப்பூரைச் சுற்றி வருதல் 21
உதவியை நாடுகிறீர்களா? 23
பயனுள்ள தொலைபேசி எண்கள் 25


# সূচীপত্র


সিঙ্গাপুরে আপনাকে স্বাগতম 27
এই সুবিধাজনক নির্দেশিকাটি সম্বন্ধে 27
সিঙ্গাপুরে কাজ করা 28
ওয়ার্ক পারমিটের শর্তাবলী 30
এজেন্সীর ফি 32
চাকরিসংক্রান্ত আইন 34
নিজের নিরাপত্তা নিজেরই হাতে 37
সিঙ্গাপুরের আইন 39
সিঙ্গাপুরের স্থানীয় অভ্যাস 43
সিঙ্গাপুরে চলাফেরা করা 45
কোনো সাহায্যের প্রয়োজন? 47
কিছু দরকারি টেলিফোন নম্বর 49



எல்லாத் தகவல்களும் மே 2011 -இன் போது சரியானவை; மேலும் தகவல்களுக்குக் காண்க www.mom.gov.sg.

২০১১-র মে পর্যন্ত সমস্ত তথ্য সঠিক। আরো তথ্য জানতে দেখুন www.mom.gov.sg.

# சிங்கப்பூருக்கு உங்கள் வரவு நல்வரவாகுக

பல்வேறு பண்பாடுகளும் மொழிகளும் கலக்கும் நாடான சிங்கப்பூருக்கு உங்கள் வரவு நல்வரவாகுக.

சிங்கப்பூருக்கு நீங்கள் வேலை செய்ய வருவது இதுவே முதல் முறை எனினும், அனைத்தும் பழக்கமற்றவை எனினும், கவலை வேண்டாம். இங்கு உங்கள் வேலைச் சூழலை மற்றும் வாழ்க்கைச் சூழலை எவ்வாறு ஏற்பது, அவற்றுடன் எவ்வாறு இசைந்து செல்வது என்பவை பற்றி இவ்வழிகாட்டி நூல் உங்களுக்கான தகவல்களை அளிக்கும்.



## இந்த வழிகாட்டி நூல் பற்றி

நீங்கள் சிங்கப்பூரில் வேலை செய்யும் போது உங்கள் வேலை உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள, தகவல்கள் நிறைந்த இவ்வழிகாட்டி நூல் உங்களுக்கு உதவி செய்யும். உதவிக்கான வழிகள், எடுத்துக்காட்டாக மனித வள அமைச்சு, காவல்துறை போன்றவற்றின் பயனுள்ள தொலை பேசி எண்களைப் பற்றிய முக்கியமான தகவல்களை, இவ்வழிகாட்டி நூலில் நீங்கள் காணலாம்.



# சிங்கப்பூரில் வேலை செய்தல்

சிங்கப்பூரில் வேலை செய்யும் எல்லா வெளிநாட்டவரும் செல்லுபடியாகும் வேலை அனுமதியை வைத்திருக்க வேண்டும். வேலை அனுமதியுடன் இணைந்த பல்வேறு வேலை அனுமதி நிபந்தனைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். நீங்கள் இங்கு வேலை செய்யும்போது வேலை நிபந்தனைகள் மட்டுமல்லாமல் சிங்கப்பூர் சட்ட விதிகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்.

உள்ளூர் ஊழியர்களைப் போன்றே, சிங்கப்பூரில் உள்ள எல்லா வெளிநாட்டு ஊழியர்களும் சிங்கப்பூரின் வேலைச் சட்டம் மற்றும் குற்றவியல் சட்ட விதிகளால் சமமாகப் பாதுகாக்கப்படுவர். வெளிநாட்டு ஊழியர்களை மோசமாக நடத்துகின்ற அல்லது தவறாகப் பயன்படுத்துகின்ற முதலாளிகள் தண்டிக்கப்படுவர்.



## பயன்மிக்க வேலை அனுபவம் பெற்றிடுவீர்

சிங்கப்பூரில் வேலை செய்வது மிகுந்த ஆதாயம் தரும் அனுபவமாக இருக்க முடியும். புதிய சூழலுடன் ஒத்து செல்வது துவக்கத்தில் உங்களுக்குக் கடினமாக இருக்கலாம், திறந்த மனதுடன் நேர்மறையாக இருப்பது புதிய மாற்றங்களை எளிதாக ஏற்றுக்கொள்வதற்கு உதவி செய்யும்.

உங்கள் தாய் நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டு ஊழியர்கள் பலர் சிங்கப்பூரில் வேலை செய்வதை நீங்கள் காண்பீர்கள்; வேலையில் விரைந்து உங்களை ஈடுபடுத்திக்கொள்ள அவர்கள் உதவக்கூடும். வேலையிடத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி உடன் வேலை செய்பவர்களிடம் நீங்கள் அறிவுரை நாடலாம், அல்லது நீங்கள் இங்கு தங்கியிருப்பதை மேன்மையுடையதாக ஆக்கும் வகையில் விடுமுறை நாட்களின் போது அவர்களுடன் கலந்து பழகலாம்.



# வேலை அனுமதி நிபந்தனைகள்

உங்களுக்குப் வேலை அனுமதிச் சீட்டு அளிக்கப்பட்டுள்ளது. இப்போது நீங்கள் சட்டப்படி சிங்கப்பூரில் வேலை செய்யலாம். வேலை அனுமதிச் சீட்டு பெற்றவர் என்ற முறையில், இவ்வுரிமைகளில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கீழ்படிந்து நீங்கள் நடக்க வேண்டும். இந்த நிபந்தனைகள் பின்வருமாறு:

## (i) வேலை வாய்ப்பு

- வேலை அனுமதிச் சீட்டில் குறிக்கப்பட்டுள்ள வேலை மற்றும் முதலாளியிடம் மட்டுமே நீங்கள் வேலை செய்ய முடியும்.
- வேறு எந்தத் தொழிலிலும் நீங்கள் ஈடுபடக் கூடாது; அல்லது உங்கள் சொந்தத் தொழில் துவங்கக் கூடாது.
- வேலையைத் துவங்கும்போது உங்கள் முதலாளி அளித்த முகவரியில் மட்டுமே நீங்கள் தங்க அனுமதிக்கப்படுகிறீர்கள். உங்கள் முகவரியை மாற்றினால், உங்கள் முதலாளிக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்.
- சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர் ஒருவரிடம் நீங்கள் மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். நீங்கள் வேலைக்குத் தகுதியற்றவர் என மருத்துவச் சான்றிதழ் அளிக்கப்பட்டால், உங்கள் வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்படும்.
- அசல் வேலை அனுமதிச் சீட்டை நீங்கள் எப்போதும் வைத்திருக்க வேண்டும்; அரசாங்க அதிகாரி யாரேனும் சோதனைக்காக கேட்டால் அதனைக் காட்ட வேண்டும்.




உங்கள் வேலை அனுமதிச் சீட்டில் குறிக்கப்படாத வேறொரு முதலாளியிடம் பணிபுரிவது அல்லது வேலையைச் செய்வது சட்டவிரோதமாகும்.

## (ii) நடத்தை

- வேலை அனுமதி ஆணையாளரின் ஒப்புதல் இன்றி சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவரையோ நிரந்தரவாசியையோ சிங்கப்பூருக்கு உள்ளே அல்லது வெளியே நீங்கள் திருமணம் செய்துகொள்ள முடியாது. உங்கள் வேலை அனுமதி முடிந்த பின்னரும், நீக்கப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட பின்னரும் கூட இது பொருந்தும்.

- நீங்கள் வேலை அனுமதி ஆணையாளரின் அனுமதியுடன் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவரை அல்லது நிரந்தரவாசியை ஏற்கனவே திருமணம் செய்துகொண்டிருந்தாலொழிய சிங்கப்பூரில் வேலை செய்யும்போது தாய்மை அடைவதோ அல்லது குழந்தை பெற்றுக்கொள்வதோ கூடாது. உங்கள் வேலை அனுமதி முடிந்த பின்னரும், நீக்கப்பட்ட அல்லது ரத்துசெய்யப்பட்ட பின்னரும் கூட இது பொருந்தும்.




இந்த வேலை அனுமதி நிபந்தனைகளை நீங்கள் மீறினால், உங்கள் வேலை அனுமதி நீக்கப்படலாம், மேலும் எதிர்காலத்தில் நீங்கள் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதி மறுக்கப்படலாம்.

## உங்கள் முதலாளியின் கடமைகள்

தம்மிடம் வேலை செய்யும் வெளிநாட்டு ஊழியர்களின் நல் வாழ்வை முதலாளிகள் பேணிப் பாதுகாப்பதற்கு வேலை அனுமதி நிபந்தனைகளை MOM விதித்துள்ளது. இவற்றைப் பின்பற்றத் தவறினால் அவர்கள் மீது வேலை வாய்ப்பிற்கான வெளிநாட்டு மனித ஆற்றல் சட்டத்தின் (EFMA) கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

தகுந்த வீட்டு வசதி, பாதுகாப்பான வேலைசெய்யும் சூழல் ஆகியவற்றை அளிப்பது இந்த நிபந்தனைகளுள் சிலவாகும்.

- உங்களது பாதுகாப்புக்கும் பராமரிப்புக்குமான செலவை ஏற்றுக்கொள்வது உங்கள் முதலாளியின் பொறுப்பாகும். இதில் மருத்துவச் சிகிச்சையும் அடங்கும்.
- பாதுகாப்பான வேலை சூழலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க தங்குமிடத்தையும் உங்கள் முதலாளி அளிக்க வேண்டும்.
- வெளிநாட்டுப் ஊழியர்களை வேலைக்கு அமர்த்த-பணமாகவோ அல்லது பொருள் வகையாகவோ- உங்கள் முதலாளி கையூட்டு எதையும் கேட்கவோ பெற்றுக்கொள்ளவோ கூடாது. வேலைத் தொடர்பான செலவுகளை வெளிநாட்டுப் வேலை செய்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு அனுமதி இல்லை.

# முகமைக் கட்டணங்கள்

### (i) கட்டண வரம்பு

ஒவ்வொரு வருடத்திற்கான உங்களது பணி அனுமதி அல்லது வேலைவாய்ப்பு ஒப்பந்தக் காலம், இவை இரண்டில் எது குறைவான காலமோ அக்காலத்திற்காக நீங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமைக்கு ஒரு மாதச் சம்பளத்திற்கு மேல் கொடுக்கக் கூடாது.

உதாரணமாக, *உங்களுடைய பணி அனுமதி மற்றும் வேலைவாய்ப்பு ஒப்பந்தம் 1.5 வருடங்களுக்கு செல்லுபடியானது என்றால், முகமைக் கட்டணங்களுக்காக நீங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமைக்கு உங்களுடைய 1.5 மாதச் சம்பளத்திற்கு மேல் கொடுக்கக் கூடாது.*

கட்டண வரம்பானது அதிகபட்சமாக 2 மாத சம்பளத்திற்கு உட்பட்டதாகும். *உங்களுடைய பணி அனுமதி மற்றும் வேலைவாய்ப்பு ஒப்பந்தம் 2 வருடங்களுக்கும் அதிகமாக செல்லுபடியானது என்றாலும் கூட, முகமைக் கட்டணங்களுக்காக நீங்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமைக்கு உங்களுடைய 2 மாதச் சம்பளத்திற்கு மேல் கொடுக்கக் கூடாது.*

உங்களுடைய சொந்த நாட்டு முகவர் உங்களிடமிருந்து முகமைக் கட்டணத்தை வசூலித்து, அதன் ஒரு பகுதியை சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமையிடம் அளிக்கக் கூடும். கட்டண வரம்பானது சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமைக்கு வழங்கப்படும் முகமைக் கட்டணங்களையும் உள்ளடக்குகிறது.

நீங்கள் செலுத்துகின்ற ஏதேனும் கட்டணங்களுக்காக சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமைகள் உங்களுக்கு இரசீதுகளை வழங்க வேண்டியது கட்டாயமாகும். கட்டண வரம்பைக் காட்டிலும் அதிகமான கட்டணங்களை சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமை வசூலித்தது என்பதைக் காட்டுகின்ற ஏதேனும் இரசீதுகளையோ அல்லது ஒப்பந்தங்களையோ நீங்கள் வைத்திருந்தால், உங்கள் கோரலை MOM க்கு தயவு செய்து தெரிவியுங்கள். *(தெரிவித்தல் குறித்த விவரங்களை பக்கம் 23 யில் பார்க்கவும்).*

## (ii) கட்டணம் திருப்பியளிக்கப்படுதல்

உங்களுடைய முதலாளி 6 மாதங்களுக்குள் உங்களுடைய ஒப்பந்தத்தை குறித்த காலத்திற்கு முன்பாகவே முறித்துவிடுகிறார் எனில், சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமை உங்களிடமிருந்து வசூலித்த கட்டணத்தில் குறைந்தபட்சம் 50% ஐ உங்களுக்கு திருப்பி கொடுக்க வேண்டியது கட்டாயமாகும்.



# வேலை வாய்ப்புச் சட்டங்கள்

ஒரு ஊழியராக உங்கள் உரிமைகளையும் உங்கள் முதலாளியின் பொறுப்புகளையும் நீங்கள் அறிந்து கொள்வது முக்கியம். உங்கள் வேலைக் கடமைகளையும் அனுகூலங்களையும் தெளிவாக குறிக்கும் சேவை ஒப்பந்தம் வைத்திருப்பது சச்சரவுகளை குறைக்கவும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்கவும் உதவும்.

கீழ்கண்டவற்றை உள்ளடக்கிய எழுத்து பூர்வமான சேவை ஒப்பந்தம் ஒன்றை உங்கள் முதலாளியுடன் செய்துகொள்ளுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்:


## (i) ஊதியம் வழங்குதல்

ஊதிய நாளுக்குப் பின்னர் 7 நாட்களுக்குள் நீங்கள் உங்கள் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஊதிய நாளுக்குப் பின்னர் 14 நாட்களுக்குள் கூடுதல் நேர வேலைக்கான ஊதியம் உங்களுக்கு வழங்கப்பட்டுவிட வேண்டும்.

கீழ்கண்டவை தவிர வேறு எதற்கும் உங்கள் முதலாளி ஊதியக் கழிவுகளை மேற்கொள்ள இயலாது:

- வேலைக்கு வராமல் இருந்தல்
- முதலாளியால் வழங்கப்படும் உணவுகளுக்கான செலவு
- தங்குமிடம், வசதிகள் மற்றும் சேவைகள்
- முன்பணம், கடன்கள் அல்லது அதிகமாகத் தரப்பட்ட ஊதியச்சரிகட்டல்கள் ஆகியவற்றை திரும்பப் பெறுதல்






## (ii) வேலை செய்யும் நேரம் மற்றும் கூடுதல் நேரம்

நீங்கள் நேரம் மாறும் (shift) வேலை செய்யாத நிலையில் உங்கள் ஒப்பந்த வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அல்லது வாரத்திற்கு 44 மணி நேரம் என்னும் கால அளவை மீறக்கூடாது. வேலைசெய்யும் கால நேரத்தில் ஓய்வு, தேநீர் மற்றும் உணவு இடைவேளைகள் சேர்வதில்லை.

உங்கள் ஒப்பந்த வேலை நேரத்திற்கு அதிகமாகச் செய்யும் வேலை அனைத்தும் கூடுதல் நேர வேலையாகக் கருதப்படும். ஒரு மணி நேரத்திற்கான அடிப்படை ஊதியத்தைப் போன்று 1.5 மடங்கை கூடுதல் நேர ஊதியமாக நீங்கள் கோர இயலும்.

## (iii) ஓய்வு நாட்கள்

வாரத்தில் ஒரு நாள் ஊதியமின்றி ஓய்வு பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் உங்கள் முதலாளி வேலை செய்யுமாறு கேட்டால், இரு நாட்களுக்கான அடிப்படை ஊதியம் உங்களுக்கு வழங்கப்படும்.

ஓய்வு நாளில் நீங்கள் வேலை செய்ய விரும்பி உங்கள் முதலாளியும் ஒப்புக் கொண்டால் 1 நாளுக்கான அடிப்படை ஊதியம் உங்களுக்கு வழங்கப்படும்.

## (iv) பொது விடுமுறை நாட்கள்

பொது விடுமுறை நாட்களில் ஊதியம் பெற உங்களுக்கு உரிமை உண்டு. பொது விடுமுறை நாட்களில் நீங்கள் வேலை செய்யாவிட்டால் கூட உங்களின் முதலாளி உங்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். பொது விடுமுறை நாட்களில் நீங்கள் வேலை செய்தால், உங்களின் முதலாளி 2 நாட்களுக்கான ஊதியத்தை உங்களுக்கு வழங்க வேண்டும்.

## (v) ஆண்டு விடுப்பு

ஒரே முதலாளியிடம் தொடர்ந்து 3 மாதங்கள் சேவை செய்தால், ஊதியத்துடன் கூடிய ஆண்டு விடுப்புப் பெற உங்களுக்குத் தகுதி உண்டு.

முதல் 12 மாதங்கள் தொடர்ந்து சேவை செய்தால் 7 நாட்களும், பின்னர் தொடர்ந்து சேவை செய்யும் ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் கூடுதலாக ஒரு நாளும் என 14 நாட்களுக்கு மேற்படாத ஆண்டு விடுப்பு பெற உங்களுக்கு உரிமை உண்டு.

தொடர்ந்து முழுமையாக 12 மாதங்கள் சேவை செய்யாத நிலையில், சரிசம வீதப்படியான ஆண்டு விடுமுறைக்கு நீங்கள் தகுதியுள்ளவராவீர்.

## (vi) மருத்துவ விடுப்பு

கீழ்கண்ட நிலைமைகளில் வெளிநோயாளிக்கான மருத்துவ விடுப்புக்கும் மருத்துவமனைச் சேர்ப்பு விடுப்புக்கும் நீங்கள் உரிமையுள்ளவராவீர்:

- குறைந்தது 3 மாதங்கள் உங்கள் புதிய முதலாளியிடம் பணிபுரிந்து இருத்தல்.
- உங்கள் கம்பெனி மருத்துவரிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் (அல்லது எந்த ஒரு பொது மருத்துவ கழகத்திலிருந்தும், அதாவது கம்பெனி மருத்துவர் கிடைக்காத நேரத்தில் அல்லது அவசர நிலையில்): மற்றும்
- உங்கள் முதலாளியிடம் 48 மணி நேரத்திற்குள் மருத்துவ விடுப்பு பற்றி தெரிவித்திருத்தல்

ஓய்வு நாள், பொது விடுமுறை நாள் அல்லது ஆண்டு விடுப்பின் போது நீங்கள் நோய்வாய்ப்பட்டால், மருத்துவ விடுப்பிற்கான உரிமை உங்களுக்குக் கிடையாது. சேவையில் 3 முதல் 6 மாதங்கள் நிறைவு செய்தால் அக்கால இடைவெளியில் நீங்கள் பெறும் ஊதியத்துடன் கூடிய நோய் விடுப்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| சேவையில் நிறைவு செய்த மாதங்கள் | ஊதியத்துடன் கூடிய புற நோயாளிக்கான விடுப்பு (நாட்கள்) | ஊதியத்துடன் கூடிய மருத்துவமனைச் சேர்ப்பு விடுப்பு (நாட்கள்) |
|---|---|---|
| 3 மாதங்கள் | 5 | 15 |
| 4 மாதங்கள் | 8 | 30 |
| 5 மாதங்கள் | 11 | 45 |
| 6 மாதங்கள் | 14 | 60 |

# பாதுகாப்பு என்னிடமிருந்து தொடங்குகிறது

## சிங்கப்பூரில் வேலை செய்யும் போது உங்களைப் பாதுகாத்துக் கொள்வீர்

சிங்கப்பூரில் ஒரு புதிய வெளி நாட்டு ஊழியர் தமது தினசரி வாழ்க்கையில் அல்லது வேலையிடத்தில் பல புதியனவற்றுடன் பொருந்திச் செல்ல வேண்டி இருக்கலாம். நீங்கள் இங்கு நல்வாழ்க்கையை நடத்த வேலையில் பாதுகாப்புடன் இருப்பது முக்கியம்.

பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றுவதும், வேலையிட அபாயங்களில் விழிப்புடன் இருப்பதும் பாதுகாப்புடன் இருக்க உதவும். சரியான தனியாள் பாதுகாப்புச் சாதனத்தை அணிந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்க. அபாய செயல்களில் ஈடுபடாதீர்; குறுக்கு வழிகளைப் பின்பற்றாதீர், பாதுகாப்பு விதிகளை அலட்சியம் செய்யாதீர்.

இந்தப் பொதுவான வேலையிட அபாயங்களில் விழிப்புடன் இருப்பதோடு எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பதையும் அறிந்திடுவீர்:

### உயரத்திலிருந்து விழுதல்



- உயரே இருக்கும் இடங்களை அடைவதற்கு உரிய மேடைகளையும் படிக்கட்டுகளையும் பயன்படுத்துக
- உங்கள் பாதுகாப்பு வாரை (harness) அணிந்து கொள்க; அது நங்கூரப் புள்ளியுடன் (anchor point) சரியாக இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்க
- உங்கள் பாதுகாப்பு வார் நன்கு வேலை செய்கிறதா, நல்ல நிலைமையில் உள்ளதா என்பவற்றை உறுதி செய்து கொள்க.

### கீழே விழும் பொருட்களால் தாக்கப்படுதல்

- கிரேன்கள் போன்றவற்றால் மேலே உயர்த்தப்படும் சுமைகளுக்குக் கீழே நிற்காதீர்
- கீழே விழுந்து பிறரைத் தாக்கக் கூடிய பகுதிகளில் பொருட்களை வைக்காதீர்.

### சறுக்கும் மற்றும் தடுக்கிவிடும் நிலைகள்

- வேலை இடத்தை ஈரமின்றி தூய்மையாகவும், கம்பிகள் போன்ற தடுக்கும் பொருட்கள் இன்றியும் வைத்திருங்கள்
- படிக்கட்டுகளைப் பயன்படுத்தும் போது கைப்பிடிகளைப் பிடித்துக்கொள்ளுங்கள்

## மின்சாரத் தாக்குதல்

- பழுதடைந்த மின் சாதனங்களையும் சாக்கெட்டுகளையும் பயன்படுத்தாதீர்.
- ஈரமில்லா நிலைமைகளில் வேலையைச் செய்திடுவீர்.



## தீப்பிடிப்புகளும் வெடிப்புகளும்

- எளிதில் தீப்பிடித்து எரியக் கூடிய கரைசல்களுக்கு அருகில் வெப்பமூட்டும் வேலைகளைச் செய்யாதீர்
- தீப்பிடித்து எரியக் கூடிய பொருட்களை மூடிய கொள்கலன்களில் வைத்து நல்ல காற்றோட்டமுள்ள பகுதிகளில் வைத்திடுவீர்.

## எல்லைக்குட்பட்ட இடங்களில் ஏற்படும் அபாயங்கள்

- குறுகலான பகுதிகளின் உள்ளே நுழைவது பாதுகாப்பானது என்று சரிபார்க்கப்படாத வரையில் அப்பகுதிகளின் உள்ளே நுழையாதீர்.
- குறுகலான பரப்பிலுள்ள பணியிடத்தில் நுழையும் முன்னர் பாதுகாப்புச் சாதனத்தை அணிந்து கொள்க.
- அவசர் நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்க.

## வேலையிடத்தில் வாகனத்தால் தாக்கப்படுதல்

- மனித நடமாட்டத்திற்கு உரிய பாதைகளில் மட்டுமே ஊழியர்கள் இருக்க வேண்டும்; மேலும் வாகனங்கள் வருவதைக் கவனிக்க வேண்டும்.
- வாகனம் ஓட்டும் ஊழியர்களுக்குச் சரியான பயிற்சி அளிக்கப்பட வேண்டும், வாகனத்தைப் பாதுகாப்புடன் ஓட்ட வேண்டும் மற்றும் வாகனம் செல்வதற்கு உரிய பாதையில் மட்டுமே ஓட்டிச் செல்ல வேண்டும்.

வேலையின்போது உங்களுக்கு விபத்து ஏற்பட்டால், உங்கள் மேலாளருக்கு தெரிவிக்கவும்.. வேலையின்போது ஏற்பட்ட விபத்துக்கு இழப்பீடு கோருவதற்கு, மேலும் உதவி தேவையெனில், மனிதவள அமைச்சிடம் புகார் செய்யவும் புகார் செய்வதற்கான விவரங்களை பக்கம் 23டில் காண்க).

# சிங்கப்பூர் சட்ட விதிகள்

சிங்கப்பூர் குடிமக்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் சிங்கப்பூர் சட்ட விதிகள் சமமாகப் பொருந்தும். நீங்கள் இங்கே வேலை செய்கையில் சிங்கப்பூர் சட்டவிதிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லாவிடில், நீங்கள் தண்டனைகளை எதிர்கொள்ள வேண்டும். இதற்கும் மேலாக, உங்கள் அனுமதி ரத்து செய்யப்படுவதோடு, எதிர்காலத்தில் நீங்கள் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டீர்கள்.

சட்ட விதிகளை மீறுவதற்கான தண்டனைகள் கீழே தரப்படுகின்றன:

| குற்றம் | தண்டனை |
|---|---|
| குப்பை போடுவது | • அபராதம் S$ 1,000 வரை |
| பொது இடங்களில் சிறு நீர் கழித்தல் | • அபராதம் S$ 1,000 வரை |
| போக்குவரத்து விதிகளை மீறி நடந்து செல்லுதல் | • சிறைத் தண்டனை 3 மாதங்கள் வரை அல்லது அபராதம் S$ 1,000 வரை |
| பொது இடத்தில் மது அருந்துதல் | • சிறைத் தண்டனை 1 மாதம் வரை அல்லது அபராதம் S$ 1,000 வரை |
| காவல்துறைக்கு பொய்யான புகார் கொடுத்தல் | • சிறைத் தண்டனை 6 மாதம் வரை அல்லது அபராதம் S$ 1,000 வரை அல்லது இரண்டும் |
| திருட்டு (திருடுதல் அல்லது கடையில் பொருட்களை கையாடுதல்) | • சிறைத் தண்டனை 3 முதல் 7 ஆண்டுகள் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும் |

| குற்றம் | தண்டனை |
|---|---|
| கொள்ளை அடிக்க வீட்டை உடைத்தல் | • சிறைத் தண்டனை 10 ஆண்டுகள் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும்<br>• இரவில் வீட்டை உடைத்தால், சிறைத் தண்டனை 14 ஆண்டுகள் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| கள்ளத்தனமாக சிகெரெட்டுகளை வாங்குதல் அல்லது விற்றல் | • அபராதம் S$ 5,000 வரை. இரண்டாவதாக அல்லது தொடர்ந்து குற்றம் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளிகள் இரண்டாண்டுகள் வரை சிறைத் தண்டனை பெறுவர். |
| அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேல் தங்கி இருத்தல் | • சிறைத் தண்டனை 6 மாதங்கள் வரை அல்லது அபராதம் S$ 6,000 வரை அல்லது இரண்டும்.<br>• அதிகமாகத் தங்கியிருப்பது 90 நாட்களுக்கு மேற்பட்டால் பிரம்படிகள் 3 க்குக் குறையாமல் மற்றும் சிறைத் தண்டனை 6 மாதங்கள் வரை. |
| மிரட்டி அச்சுறுத்தும் குற்றம் | • சிறைத் தண்டனை 2 ஆண்டுகள் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.<br>• குற்றத்தின் காரணமாக இறப்பு அல்லது கடுமையான காயங்கள் அல்லது தீயினால் சொத்துகள் நாசமாதல் போன்றவை நிகழ்ந்தால் 7 ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |

| குற்றம் | தண்டனை |
|---|---|
| **காயம் விளைவித்தல்** | • சிறைத் தண்டனை 2 ஆண்டு வரை அல்லது அபராதம் S$ 5,000 வரை அல்லது இரண்டும்.<br>• கடுமையான உடலூறுகள் ஏற்பட்டால் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் அல்லது பிரம்படி. |
| **சட்டவிரோத கூட்டம் சேர்த்தல் அல்லது ஊர்வலம் செல்லுதல்** | • சிறைத் தண்டனை 2 ஆண்டுகள் வரை |
| **கலவரம் விளைவித்தல்** | • பிரம்படி மற்றும் சிறைத் தண்டனை 7 ஆண்டுகள் வரை.<br>• ஆயுதங்களைப் பயன்படுத்தி இருந்தால், பிரம்படி மற்றும் சிறைத் தண்டனை 10 ஆண்டுகள் வரை. |
| **மானபங்கப் படுத்தல்** | • சிறைத் தண்டனை 2 ஆண்டுகள் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.<br>• 14 வயதுக்கு உட்பட்டவர் மீது குற்றமிழைத்தால் பிரம்படி மற்றும் 5 வருடங்கள் வரையில் சிறைத் தண்டனை. |

| குற்றம் | தண்டனை |
|---|---|
| **வழிப்பறிக் கொள்ளை** | • சிறைத் தண்டனை 2 முதல் 10 ஆண்டுகள் வரை மற்றும் 6 வீச்சுக்குக் குறையாமல் பிரம்படி.<br>• இரவில் வழிப்பறிக்கொள்ளை அடித்திருந்தால், சிறைத் தண்டனை 3 முதல் 14 ஆண்டுகள் வரை மற்றும் 12க்கு குறையாத பிரம்படிகள். |
| **போதை மருந்து கடத்தல்** | • மரண தண்டனை அல்லது சிறைத் தண்டனை 20 முதல் 30 ஆண்டுகள் வரை மற்றும் 15க்கு குறையாத பிரம்படிகள். |
| **கொலை** | • மரண தண்டனை. |



# சிங்கப்பூரின் உள்ளூர் பழக்க வழக்கங்கள்

சிங்கப்பூரில் பல்வேறு சமயங்களும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களும் ஒன்றிணைகின்றன. இணக்கமான வேலை மற்றும் வாழ்க்கை உறவுகளைப் பேணிப் பாதுகாக்க இந்த வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய தேவையுள்ளது.



## அக்கம்பக்கத்தவருடன் இணக்கமாக இருங்கள்

- தனிப்பட்ட பொருட்களைக் கொண்டு நடை வழிகளை அடைக்க வேண்டாம் (எ.டு. பெட்டிகள், சலவைத் துணி, மிதி வண்டிகள்).
- இரவில் உரத்து பேசுவதோ அல்லது இசை கேட்பதோ வேண்டாம்.




## பொது இடங்களில் உரிய முறையில் நடந்து கொள்க

- பிறருக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒலி அளவைக் குறைத்துக் கொள்க.
- பொது இடத்தில் சண்டையிடுவதோ அல்லது விவாதிப்பதோ வேண்டாம்.
- பொது இடங்களில் தூங்க வேண்டாம்.

## சமுதாய உடல்நலப் பழக்கம்

- தேவையற்ற உணவுப் பொருட்களை குப்பைத் தொட்டிகளில் போடுக, கரப்பான், எலி போன்ற உயிரினங்கள் சேரா வண்ணம் பாத்திரங்களை நன்றாகக் கழுவுக.
- கொசு வளர்வதைத் தடுக்கும் வகையில் தேங்கியுள்ள நீரை அப்புறப்படுத்துக.
- படுக்கையைத் தூய்மையாக வைத்திடுக.
- கழிவறைகளை அவ்வப்போது தூய்மைப்படுத்துக.




## தனிமனித உடல்நலப் பழக்கம்

- வாய் மற்றும் உடல் துர்நாற்றத்தைத் தடுக்க நாள்தோறும் பல் துலக்குக, உங்கள் முடி, முகம் மற்றும் உடலைக் கழுவுக.
- நாள்தோறும் உங்கள் உடைகளை மாற்றுக.
- உரிய முறையில் உடுத்திக்கொள்க. மேலாடையின்றி பொது இடங்களில் செல்லாதீர்; மற்றவர் அதனைக் குற்றமாகக் கருதுவர்.




## சாலைப் பாதுகாப்பு

- எதிர்வரும் போக்குவரத்துக்கு எதிராக மிதிவண்டியில் செல்லாதீர்.
- சாலையோர விளிம்புகளில் உட்காராதீர்.
- நடந்து செல்வோருக்கான கடப்பிடங்களையும், மேம்பாலங்களையும் எப்போதும் பயன்படுத்துக.




# சிங்கப்பூரைச் சுற்றி வருதல்

பொதுமக்களுக்கென ஆற்றல்மிக்க போக்குவரத்து அமைப்பு இருப்பதால் சிங்கப்பூரைச் சுற்றிப் பயணம் செய்வது எளிதானதாகும். வாடகைக் கார்கள், பேருந்துகள் மற்றும் பெருவிரைவு இரயில் சேவை (MRT) ஆகியன எளிதாக நீங்கள் பயணம் செய்வதை உறுதிப்படுத்துகின்றன.



## பேருந்து




பேருந்து வழித்தடங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள், பேருந்து நிறுத்தங்களில் மற்றும் நிலையங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. உங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை எனில் பேருந்து ஓட்டுநரிடம் நீங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு உரிய கட்டணம் பற்றிக் கேட்கவும்.

## எம் ஆர் டி




சிங்கப்பூர் முழுதும் பல இரயில் நிலையங்களுடன் எம் ஆர் டி என்னும் இரயில் சேவை நடைபெறுகிறது. நான்கு முக்கிய இரயில் பாதைகள் உள்ளன. அவை பின் வருமாறு: மெரினா பே என்னும் இடத்திலிருந்து சுராங் கிழக்கு வரை செல்லும் வடக்கு-தெற்கு இரயில் பாதை; சங்கி விமான நிலையம்/பாசி ரிஸ் தொடங்கி ஜூ கூன் வரை செல்லும் கிழக்கு-மேற்கு இரயில் பாதை; ஹார்பர் விரண்ட் தொடங்கி புங் கோல் வரை செல்லும் வடக்கு-கிழக்கு இரயில் பாதை மற்றும் டோபி காட் தொடங்கி மேரிமவுண்ட் வரை செல்லும் வட்ட இரயில் பாதை.

இரயில்கள் 05:30 மணி முதல் 00:30 மணி வரை நாள்தோறும் நடைபெறும். நீங்கள் பயணம் செய்யும் தூரத்திற்கு ஏற்ப கட்டணம் $1.00 முதல் $2.30 வரை இருக்கும்.

எம் ஆர் டி மற்றும் பேருந்துக் கட்டணங்களைச் செலுத்த உங்கள் விருப்பத்திற்கேற்ப ஸ்டோர்டு வேல்யூ ez.லிங்க் அட்டையை பெரும்பாலான எம் ஆர் டி நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் அல்லது மறுமதிப்பீடு செய்து கொள்ளலாம்.

## வாடகைக் கார்




உள்ளூர் சாலைகளில் 23,000க்கும் மேற்பட்ட வாடகைக்கார்கள் ஓடுகின்றன; பெரும்பாலான சாலைகளில் 24 மணி நேரமும் இவற்றில் பயணம் செய்ய இயலும்.

# உதவியை நாடுகிறீர்களா?

உங்கள் வேலையில் உங்களுக்கு பிரச்னைகள் இருந்தால், மனிதவள அமைச்சை (MOM) தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண்: **6438 5122** அல்லது எங்களை அணுகுவதற்கான முகவரி **18 Havelock Road, Singapore 059764.**

## முகமைக் கட்டண வரம்பு

கட்டண வரம்பைக் காட்டிலும் அதிகக் கட்டணத்தை சிங்கப்பூர் வேலைவாய்ப்பு முகமை உங்களிடமிருந்து வாங்கியுள்ளது என்பதற்கான ஏதேனும் இரசீதுகளோ அல்லது ஒப்பந்தங்களோ உங்களிடம் இருந்தால், உங்களுடைய கோரலை நீங்கள் MOM-யிடம் 6438 5122 என்ற எண்ணில் தெரிவிக்கலாம் அல்லது 120 கிம் செங் ரோடு, சிங்கப்பூர் 239436 என்ற முகவரியில் அமைந்துள்ள MOM-யின் மனிதவள மேலாண்மைப் பிரிவை அணுகலாம்.

## பணி அனுமதியின் செல்லும் காலத்தை சரிபார்த்தல்

உங்களுடைய பணி அனுமதியை நீங்கள் சரிபார்க்க விரும்பினால் அல்லது உங்களுடைய பணி அனுமதி இன்னமும் செல்லுபடி நிலையில் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள விரும்பினால், நீங்கள் MOM-ஐ 64385122 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முதன்மை ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணி அனுமதி எண்ணையும் விண்ணப்பத்தின் தேதியையும் உள்ளிடுங்கள்.

## ஊதியக் கோரிக்கைகள் மற்றும் வேலை அனுகூலன்கள்

ஊதியக் கோரிக்கைகள் மற்றும்/அல்லது வேலை அனுகூலன்கள் பற்றி உங்கள் முதலாளிக்கு எதிரான பிரச்சினைகள் இருந்தால் நீங்கள் அணுக வேண்டிய துறை:
**MOM's Labour Relations and Workplaces Division.**

## வேலையின்போது ஏற்பட்ட விபத்துக்கான இழப்பீடு

உங்கள் வேலையின்போது ஏற்பட்ட விபத்துக்கான இழப்பீடு பற்றிய கோரிக்கைகளுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் அணுக வேண்டிய துறை: **MOM's Work Injury Compensation Department.**






## பாதுகாப்பற்ற வேலையிடங்கள் மற்றும் வேலை பழக்கங்கள்

பாதுகாப்பற்ற வேலையிடத்தை / அபாயமான செயல்களை நீங்கள் பார்த்தால் அல்லது பாதுகாப்பற்ற முறையில் வேலை செய்யுமாறு உங்களைக் கேட்டால், நீங்கள் Safety Hotline-ஐ **6317 1111** என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் MOM க்கு அதை புகார் செய்யுங்கள்.

## சட்டவிரோத வேலை/வெவ்வேறு இடங்களுக்கு வேலைக்கு அனுப்புதல்/விரும்பத்தகாத தங்குமிடச் சூழல்

வேறு வேலையில் அல்லது வேறு முதலாளியிடம் வேலை செய்யுமாறு உங்களைக் கேட்டால்; அல்லது விரும்பத்தகாத தங்குமிடச் சூழல்/வேலைச் சூழல் ஆகியவற்றை நீங்கள் எதிர்கொள்ள நேர்ந்தால், நீங்கள் அணுக வேண்டிய துறை:
**MOM's Foreign Manpower Management Division,**
**120 Kim Seng Road, Singapore 239436.**

## தனிமனித நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு

உங்கள் சொந்த நலன் மற்றும் பாதுகாப்புபற்றிய கவலை இருக்குமானால், நீங்கள் **காவல்துறை தொலைபேசி எண்: 999**ஐ அல்லது உங்கள் நாட்டுத் **தூதரகத்தைத்** தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

# பயனுள்ள தொலைபேசி எண்கள்

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், கீழ்க்கண்ட எண்களை அழைத்திடுக:

| உதவி வரிகள் | |
|---|---|
|  காவல் துறை | தொ.எண்: 999 |
|  ஆம்புலன்ஸ் | தொ.எண்: 995 |
| குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்கான மையம் (MWC) | தொ.எண்: 6536 2692 |
| மனிதவள அமைச்சு | தொ.எண்: 6438 5122 |
| சமேரிட்டான்ஸ் ஆஃப் சிங்கப்பூர் (SOS) | தொ.எண்: 1800-2214 444 |
| புலம்பெயர்ந்தோர் பொருளாதாரத்திற்கான மனிதப்பண்பு நிறுவனம் (HOME) | |
| பெண் ஊழியர்களுக்கான HOME hotlines (24 மணி நேரம்) | தொ.எண்: 6341 5525 |
| ஆண் ஊழியர்களுக்கான HOME hotlines (24 மணி நேரம்) | தொ.எண்: 6341 5535 |
| நிலையற்ற ஊழியர்களின் Count too (TWC2) | தொ.எண்: 1800-888 1515 |

# தூதரகங்கள்

| | |
|---|---|
| **High Commission of the People's Republic of Bangladesh**<br>হাই কমিশন<br>গণ প্রজাতন্ত্রী বাংলাদেশ সরকার | **Tel: 6255 0075** |
| **Embassy of the People's Republic of China**<br>中华人民共和国大使馆 | **Tel: 6412 1900** |
| **High Commission of India**<br>இந் திய உயர் ஆணையகம் | **Tel: 6238 2550** |
| **Embassy of the Republic of Indonesia**<br>Kedutaan Besar Republik Indonesia | **Tel: 6737 7422** |
| **Malaysian High Commission**<br>Suruhanjaya Tinggi Malaysia | **Tel: 6235 0111** |
| **Embassy of the Republic of the Union of Myanmar**<br>သံရုံး၊ မြန်မာနိုင်ငံ | **Tel: 6735 1672** |
| **High Commission of the Islamic Republic of Pakistan**<br>اسلامی جمہوریہ پاکستان کا ہائی کمیشن | **Tel: 6737 6988** |
| **Embassy of the Republic of Philippines**<br>Embahada ng Republika ng Pilipinas | **Tel: 6737 3977** |
| **High Commission of the Democratic Socialist Republic of Sri Lanka**<br>ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මහ කොමසාරිස් | **Tel: 6254 4595** |
| **Royal Thai Embassy**<br>สถานเอกอัครราชทูตไทย | **Tel: 6737 2644** |

சிங்கப்பூரில் உள்ள உங்களுடைய தூதரகத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள். தேவையேற்படும் சமயத்தில் உங்களுடைய தூதரகம் உங்களுக்கு உதவி புரிந்திடும்.


# সিঙ্গাপুরে আপনাকে স্বাগতম

নানা সংস্কৃতি ও ভাষার মিলনস্থল সিঙ্গাপুরে আপনাকে স্বাগতম ।

যদি সিঙ্গাপুরে এটি আপনার প্রথম কাজ হয় এবং সব কিছু অপরিচিত মনে হয় তাহলে চিন্তা করবেন না।
এই নির্দেশিকাটি এখানে আপনার নূতন কাজের ও বসবাসের পরিবেশের সঙ্গে কীভাবে নিজেকে মানিয়ে নিতে পারবেন সে বিষয়ে আপনাকে তথ্য জোগাবে।

## এই সুবিধাজনক নির্দেশিকাটি সম্বন্ধে

এই তথ্যপূর্ণ সুবিধাজনক নির্দেশিকাটি আপনাকে সিঙ্গাপুরে কাজ করাকালীন আপনার চাকরিসংক্রান্ত অধিকার ও দায়িত্বগুলি বুঝতে সাহায্য করবে। এই নির্দেশিকাটিতে আপনি গুরুত্বপূর্ণ তথ্যও পাবেন যেমন সাহায্য পাবার উপায়, যথা মিনিস্ট্রি অফ ম্যানপাওয়ার, পুলিশ প্রভৃতি বিভাগের দরকারি টেলিফোন নম্বর।



# সিঙ্গাপুরে কাজ করা

সিঙ্গাপুরে চাকরিরত সকল বিদেশীর কাছে অবশ্যই একটি বৈধ ওয়ার্ক পারমিট থাকতে হবে। ওয়ার্ক পারমিটের সঙ্গে অনেকগুলি শর্ত জড়িত থাকে যেগুলি আপনাকে অবশ্যই মেনে চলতে হবে। এখানে চাকরি করাকালীন নিয়োগ সংক্রান্ত বিধিনিয়ম সহ সিঙ্গাপুরের আইনও আপনি অবশ্যই মেনে চলবেন বলে আশা করা হয়।

স্থানীয় কর্মীদের মতই, সিঙ্গাপুরের সমস্ত বিদেশী কর্মী সিঙ্গাপুরের নিয়োগ প্রবিধান ও ফৌজদারি আইনে সমানভাবে সুরক্ষিত। বিদেশী কর্মীদের সঙ্গে খারাপ ব্যবহার করে বা তাদের গালাগালি দেয় এমন নিয়োগকর্তাদের কাছ থেকে কৈফিয়ৎ তলব করা হবে।



## আপনার চাকরিজীবন ফলপ্রসূ হোক

সিঙ্গাপুরে চাকরি করা আপনার জন্য একটি অত্যন্ত আনন্দদায়ক অভিজ্ঞতা হতে পারে। প্রথম প্রথম নূতন পরিবেশের সঙ্গে মানিয়ে নিতে অসুবিধা হলেও, খোলা মন ও উৎসাহী দৃষ্টিভঙ্গি রাখলে আপনার এই বদলগুলির সঙ্গে নিজেকে খাপ খাওয়াতে সুবিধা হবে।

আপনি হয়তো আপনার দেশ থেকে আসা অনেককেই সিঙ্গাপুরে চাকরি করতে দেখবেন, এবং তাঁরা আপনাকে সিঙ্গাপুরের চাকরিজীবনে দ্রুত মানিয়ে নিতে সাহায্যও করতে পারবেন। আপনার বিদেশী কর্মী বন্ধুদের কাছ থেকে আপনি চাকরির জায়গার বিভিন্ন সমস্যার মোকাবিলা করার জন্য পরামর্শ চাইতে পারেন অথবা আপনার ছুটির দিনে কোনো কার্যক্রমে যোগ দিয়ে ভালোভাবে সময়ের সদ্ব্যবহার করতে পারেন।




# ওয়ার্ক পারমিটের শর্তাবলী

আপনাকে একটি ওয়ার্ক পারমিট সরবরাহ করা হয়েছে। আপনি এখন আইনসম্মতভাবে সিঙ্গাপুরে চাকরি করতে পারেন। একজন ওয়ার্ক পারমিট ধারী হিসাবে আপনাকে এই বিশেষ সুবিধার শর্তগুলি মেনে চলতে হবে। এই শর্তগুলির মধ্যে আছে:

## (১) চাকরি

- আপনি কেবলমাত্র আপনার ওয়ার্ক পারমিটে উল্লেখিত নিয়োগকর্তা ও নির্ধারিত পেশাতেই কাজ করতে পারবেন।
- আপনি অন্য কোনো ব্যবসায় অংশগ্রহণ করতে পারবেন না বা নিজে ব্যবসা শুরু করতে পারবেন না ।
- আপনার কাজ শুরু করার সময় আপনার নিয়োগকর্তা যে ঠিকানা নির্দিষ্ট করে দেবেন কেবলমাত্র সেখানেই আপনি বসবাস করতে পারবেন। বসবাসের ঠিকানা বদলালে তা আপনার নিয়োগকর্তাকে জানাতে হবে।
- আপনাকে অবশ্যই সিঙ্গাপুরের কোন রেজিস্টার্ড ডাক্তারকে দিয়ে নিজের শারীরিক পরীক্ষা করাতে হবে। যদি আপনি শারীরিকভাবে কাজের জন্য অযোগ্য ঘোষিত হন তাহলে আপনার ওয়ার্ক পারমিট বাতিল করা হবে।
- আপনাকে সবসময় আপনার আসল ওয়ার্ক পারমিটটি সঙ্গে রাখতে হবে এবং কোনো সরকারি অফিসার দেখতে চাইলে তৎক্ষণাৎ সেটি দেখাতে হবে।

অন্য কোনো নিয়োগকর্তার অধীনে এবং ওয়ার্ক পারমিটে উল্লেখিত নয় এমন কোনো পেশায় কাজ করা বেআইনী।



## (২) আচরণবিধি

- ওয়ার্ক পারমিট কণ্ট্রোলার বা নিয়ন্ত্রকের অনুমতি ছাড়া সিঙ্গাপুরের ভিতরে বা বাইরে সিঙ্গাপুরের কোনো নাগরিক বা স্থায়ী বাসিন্দাকে আপনি বিয়ে করতে পারবেন না। আপনার ওয়ার্ক পারমিটের মেয়াদ শেষ হয়ে গেলে, বাতিল হয়ে গেলেও এই বিধি বলবৎ থাকবে।

- আপনার ওয়ার্ক পারমিটের মেয়াদের মধ্যে আপনি সিঙ্গাপুরে গর্ভধারণ করতে বা সন্তানের জন্ম দিতে পারবেন না যদি না আপনি ওয়ার্ক পারমিট কণ্ট্রোলার বা নিয়ন্ত্রকের অনুমতি নিয়ে সিঙ্গাপুরের কোনো নাগরিক বা স্থায়ী বাসিন্দাকে বিয়ে করে থাকেন। আপনার ওয়ার্ক পারমিটের মেয়াদ শেষ হয়ে গেলে, অথবা বাতিল হয়ে গেলেও এই বিধি আপনার উপর বলবৎ থাকবে।




এই ওয়ার্ক পারমিট সংক্রান্ত শর্তগুলির কোনোটি ভঙ্গ করলে আপনার ওয়ার্ক পারমিট বাতিল করা হতে পারে এবং ভবিষ্যতে আপনাকে সিঙ্গাপুরে প্রবেশ না-ও করতে দেওয়া হতে পারে।

## আপনার নিয়োগকর্তার বাধ্যবাধকতা

MOM নিয়োগকর্তাদের উপরেও তাদের বিদেশী কর্মীদের সুখস্বাচ্ছন্দ্য নিশ্চিত করার জন্য ওয়ার্ক পারমিট সংক্রান্ত শর্ত আরোপ করে থাকে। যা পালন করতে ব্যর্থ হলে, Employment of Foreign Manpower Act (EFMA)-র অধীনে তাঁদের আদালতে অভিযুক্ত করা যেতে পারে।

উপযুক্ত বাসস্থান ও নিরাপদ কাজের পরিবেশের ব্যবস্থা করাও এই শর্তগুলির মধ্যে পড়ে।

- আপনার নিয়োগকর্তা আপনার ভরণপোষণের দায়িত্ব ও খরচ বহন করবেন। আপনার চিকিৎসার খরচও এর মধ্যে পড়বে।
- আপনার নিয়োগকর্তা নিরাপদ কাজের পরিবেশ ও উপযুক্ত বাসস্থানের ব্যবস্থা করবেন।
- আপনার নিয়োগকর্তা বিদেশী কর্মী নিয়োগের মূল্য হিসাবে কোনো অর্থ বা বস্তু দাবি বা গ্রহণ করতে পারেন না। বিদেশী কর্মীদের কাছ থেকে নিয়োগসংক্রান্ত খরচও তাঁরা পুনরুদ্ধার করতে পারবেন না।

# এজেন্সীর ফি

## (১) ফি-এর সীমা

আপনার ওয়ার্ক পারমিটের সময়সীমা অথবা আপনার চাকরির চুক্তির যেটি কম হবে, সেই সময়সীমার প্রতিটি বছরের জন্য একমাসের বেতনের বেশি কখনই সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সীকে দেবেন না।

উদাহরণস্বরূপ, *যদি আপনার ওয়ার্ক পারমিট এবং চাকরির চুক্তি ১.৫ বছরের জন্য বৈধ হয়, তাহলে আপনি সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী-কে কখনই আপনার ১.৫ মাসের বেতনের বেশি দেবেন না।*

ফি-এর সর্বোচ্চ সীমা হল আপনার ২ মাসের বেতন। *যদি আপনার ওয়ার্ক পারমিট এবং চাকরির চুক্তি ২ বছরের বেশি বৈধ হয়, তাহলেও আপনি সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী-কে এজেন্সী ফি হিসাবে কখনই আপনার ২ মাসের বেতনের বেশি দেবেন না।*

আপনার দেশের এজেন্ট আপনার কাছ থেকে এজেন্সী ফি নিতে পারে, যার কিছু অংশ তারা সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী-কে দিতে পারে। এজেন্সী ফি-এর সর্বোচ্চ সীমায় সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী-কে এইভাবে দেওয়া ফি-এর অংশও গণ্য হবে।

আপনার দেওয়া ফি-এর জন্য সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী আপনাকে অবশ্যই রসিদ দেবে। যদি আপনার কাছে রসিদ অথবা চুক্তি থাকে যা থেকে প্রমাণ হয় হয় যে সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী আপনার কাছ থেকে এজেন্সী ফি-এর সর্বোচ্চ সীমা থেকে বেশি ফি নিয়েছে, তবে অনুগ্রহ করে আপনার দাবী MOM -কে জানান। *(বিবৃতকরণের বিস্তারিত বিবরণ জানতে দেখুন পৃষ্ঠা ৪৭।)*

## (২) ফি ফেরত

আপনার নিয়োগকর্তা যদি মাত্র ৬ মাসের মধ্যে আপনার চাকরির চুক্তি বাতিল করে, তবে সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী আপনার কাছ থেকে সংগ্রীহিত ফি-এর অন্তত ৫০% ফেরত দিতে বাধ্য থাকবে।



# চাকরিসংক্রান্ত আইন

একজন কর্মী হিসাবে আপনার অধিকারগুলি এবং আপনার নিয়োগকর্তার বাধ্যবাধকতাগুলি আপনার জেনে রাখা দরকার। আপনি যে কাজের দায়িত্ব পালন করবেন ও এ জন্য যা যা সুবিধা আপনি পাবেন সেগুলি স্পষ্টভাবে উল্লেখ করে একটি লিখিত নিয়োগ চুক্তি থাকলে ভবিষ্যতে মতভেদ বা ভুল বোঝাবুঝি এড়ানো যাবে।

আপনাকে আপনার নিয়োগকর্তার সঙ্গে একটি লিখিত নিয়োগ চুক্তি করতে পরামর্শ দেওয়া হচ্ছে যাতে অবশ্যই নিচের বিষয়গুলির উল্লেখ থাকবে:


## (১) বেতন বা মাইনে দেওয়া

আপনি মাসে অন্ততঃপক্ষে একবার মাইনে পাবেন এবং তা আপনাকে দিতে হবে বেতন দেয়ার নির্ধারিত সময় (স্যালারি পিরিয়ড) শেষ হওয়ার ৭ দিনের মধ্যে। ওভারটাইমের মাইনে বেতন দেয়ার নির্ধারিত সময় (স্যালারি পিরিয়ড) শেষ হওয়ার ১৪ দিনের মধ্যে মিটিয়ে দিতে হবে ।

নিম্নলিখিত কারণগুলি ছাড়া আপনার নিয়োগকর্তা মাইনে থেকে কোনো অর্থ কেটে নিতে পারবেন না:

- কাজে অনুপস্থিত থাকা
- নিয়োগকর্তা দ্বারা খাওয়াখরচ মেটানো
- বাসস্থান, সুবিধা ও পরিসেবা
- আগাম বেতন, ঋণ বা বেশি বেতন দেওয়া হয়ে থাকলে তার অর্থ পুনরুদ্ধার






## (২) কাজের সময় ও ওভারটাইম

শিফ্‌টে কাজ না করলে চুক্তি অনুসারে আপনাকে দৈনিক ৮ ঘণ্টা বা সপ্তাহে ৪৪ ঘণ্টার বেশি কাজ করতে হবে না। তবে বিশ্রাম, চা পান বা খাবার খাওয়ার বিরতি উক্ত সময়ের মধ্যে গণ্য হবে না।

আপনার চুক্তিমাফিক কাজের বাড়তি সব কাজকে ওভারটাইম কাজ ধরা হবে। আপনি ওভারটাইম বেতন দাবি করতে পারবেন যা আপনার ঘণ্টামাফিক মূল বেতনের ১ ১/২ গুণ হারে হবে।

## (৩) বিশ্রামের দিনগুলি

আপনি সপ্তাহে একদিন বেতন ছাড়া ছুটি পাবেন। তবে আপনার নিয়োগকর্তা ঐ দিনে আপনাকে কাজ করতে বললে আপনাকে দুই দিনের বেতন দেওয়া হবে।

আপনি যদি আপনার ছুটির দিনে কাজ করতে অনুরোধ করেন এবং আপনার নিয়োগকর্তা সম্মত হন তাহলে আপনাকে ১ দিনের মূল বেতন দেওয়া হবে।

## (৪) পাবলিক বা সাধারণ ছুটির দিন

আপনাকে কাজ করতে হয় না এমন প্রতিটি সাধারণ ছুটির দিনের জন্য আপনি ১ দিনের মাইনে পাবেন। তবে যদি আপনার নিয়োগকর্তা আপনাকে সাধারণ ছুটির দিনে কাজ করতে বলেন তাহলে আপনাকে এর সঙ্গে আরো এক দিনের অতিরিক্ত বেতন দেওয়া হবে।

## (৫) বার্ষিক ছুটি

একই নিয়োগকর্তার কাছে একটানা অন্ততঃ ৩ মাস  কাজ করার পর আপনি বার্ষিক ছুটি বেতনসহ পাবার যোগ্য বলে বিবেচিত হবেন।

প্রথম ১২ মাস একটানা কাজ করার পর ৭ দিন এবং পরবর্তী প্রতি ১২ মাস একটানা কাজ করার পর অতিরিক্ত এক দিন করে ছুটি বাড়বে যা সর্বোচ্চ ১৪ দিন পর্যন্ত পেতে পারেন।

যদি আপনি একটানা ১২ মাস কাজ না করে থাকেন তবে আপনি আনুপাতিক হারে বার্ষিক ছুটি পাবেন।

## (৬) অসুস্থতাজনিত ছুটি

আপনি  বেতনসহ হাসপাতালে না থাকতে হওয়া অসুস্থতাজনিত ছুটি এবং হাসপাতালে থাকতে হওয়া অসুস্থতাজনিত ছুটি পাবেন  যদি আপনি :

- আপনার নিয়োগকর্তার কাছে অন্ততঃ ৩ মাস কাজ করে থাকেন;
- আপনার কোম্পানির ডাক্তারের কাছ থেকে বা হাতের কাছে কোম্পানির ডাক্তার পাওয়া না গেলে কোনো সরকারি চিকিৎসা সংস্হা থেকে বা জরুরী পরিস্থিতির সময় একটি মেডিক্যাল সার্টিফিকেট পেয়ে থাকেন; এবং
- আপনার নিয়োগকর্তাকে ৪৮ ঘণ্টার মধ্যে অসুস্থতাজনিত ছুটির কথা জানিয়ে থাকেন।

যদি আপনি আপনার বিশ্রামের দিন, সাধারণ ছুটির দিন, বা আপনার বার্ষিক ছুটিতে থাকাকালীন অসুস্থ হয়ে পড়েন তবে সেগুলো আপনি অসুস্থতাজনিত ছুটি হিসেবে দাবি করতে পারবেন না।
বেতনসহ অসুস্থতাজনিত ছুটি নিম্নলিখিত ভাবে ৩ থেকে ৬ মাসের চাকরি পূর্ণ হওয়ার মধ্যে পর্যায়ক্রমে দেওয়া হবে, যেমন:

| যত মাস চাকরি পূর্ণ হয়েছে | বেতনসহ হাসপাতালে না থাকতে হওয়া অসুস্থতাজনিত ছুটি | বেতনসহহাসপাতালে থাকতে হওয়া অসুস্থতাজনিত ছুটি |
|---|---|---|
| ৩ মাস | ৫ দিন | ১৫ দিন |
| ৪ মাস | ৮ দিন | ৩০ দিন |
| ৫ মাস | ১১ দিন | ৪৫ দিন |
| ৬ মাস | ১৪ দিন | ৬০ দিন |

# নিজের নিরাপত্তা নিজেরই হাতে

## সিঙ্গাপুরে কাজ করাকালীন নিজেকে সুরক্ষিত রাখুন

সিঙ্গাপুরে কাজ করতে এসে একজন নূতন বিদেশী কর্মীকে দৈনন্দিন জীবনে ও কাজের জায়গায় অপরিচিত অনেক কিছুর সঙ্গেই খাপ খাইয়ে নিতে হতে পারে। কাজের জায়গায় নিজেকে সুরক্ষিত রাখাটা জরুরি যাতে আপনি এখানে ভালোভাবে জীবিকানির্বাহ  করতে পারেন।

নিরাপদ থাকতে, সুরক্ষা ব্যবস্থাগুলি মেনে চলুন এবং কর্মক্ষেত্রের ঝুঁকিগুলি সম্বন্ধে সতর্ক থাকুন। যথাযথ পার্সোনাল প্রোটেক্টিভ ইক্যুইপমেন্ট বা ব্যক্তিগত সুরক্ষা সরঞ্জাম পরে নিজেকে নিরাপদ রাখুন। ঝুঁকি নিয়ে, শর্টকাটে বা নিরাপত্তার নিয়ম-কানুন উপেক্ষা করে কাজ করতে যাবেন না।

কর্মক্ষেত্রের  নিম্নলিখিত সাধারণ ঝুঁকিগুলি সম্বন্ধে সচেতন থাকুন এবং কী ভাবে নিরাপদ থাকবেন জেনে নিন:

## উঁচু জায়গা থেকে নিচে পড়া

- উঁচু জায়গায় পৌঁছনোর জন্য সঠিক পাটাতন ও সিঁড়ি ব্যবহার করুন।
- আপনার হারনেসটি পরে থাকুন ও সেটি যেন কোনো একটি জায়গায় দৃঢ় ভাবে আটকানো থাকে তা দেখে নিন।
- আপনার হারনেসটি ঠিকঠাক কাজ করছে কিনা ও সেটি ত্রুটিমুক্ত কিনা তা সম্বন্ধে নিশ্চিত হোন।



## নিচে পড়তে থাকা বস্তুর আঘাত লাগা

- ক্রেন বা ঐ ধরণের কোনো কিছুর সাহায্যে ভারি ওজন ওঠানোর সময় ঐ ওজনের নিচে দাঁড়াবেন না।
- এমন জায়গায় জিনিস রাখবেন না যেখান থেকে তা কারো গায়ে পড়তে পারে।

## পিছলে এবং হোঁচট খেয়ে পড়া

- কাজের জায়গা  শুকনো ও পরিষ্কার রাখবেন এবং সেখানে পায়ে জড়িয়ে যেতে পারে এমন জিনিস যেমন তার ইত্যাদি রাখবেন না।
- সিঁড়ি দিয়ে নামার সময় রেলিং ধরে নামবেন।

## বৈদ্যুতিক শক লাগা

- ত্রুটিযুক্ত বৈদ্যুতিক সরঞ্জাম ও সকেট ব্যবহার করবেন না।
- শুকনো পরিবেশে কাজ করুন।



## আগুন লাগা ও বিস্ফোরণ

- দাহ্য পদার্থ যেমন সলভেন্ট ইত্যাদির কাছাকাছি গরমের কাজ করবেন না।
- দাহ্য পদার্থ বন্ধ পাত্রে এবং হাওয়া চলাচল করে এমন জায়গায় রাখুন।

## আবদ্ধ জায়গার বিপদ

- কোনো আবদ্ধ জায়গায় ঢুকবেন না যদি না সেই জায়গাটিতে নিরাপদে কাজ করা যাবে কিনা তা আগেই পরীক্ষা করা হয়ে থাকে।
- আবদ্ধ জায়গাটিতে ঢোকার আগে সুরক্ষা সরঞ্জাম পরে নিন।
- আচমকা বিপদে কী করতে হবে জেনে রাখুন।

## কাজের সময় গাড়ির ধাক্কা লাগা

- কর্মীদের অবশ্যই কেবলমাত্র মানুষ চলাচলের জন্য নির্দিষ্ট রাস্তায় চলাচল করতে হবে এবং গাড়ির ব্যাপারে সতর্ক থাকতে হবে।
- যে সব কর্মীরা গাড়ি চালান তাঁদের যথাযথ প্রশিক্ষণ থাকতে হবে, তাঁদের নিরাপদভাবে গাড়ি চালাতে হবে এবং কেবলমাত্র গাড়ি চলাচলের জন্য নির্দিষ্ট রাস্তায় গাড়ি চালাতে হবে।

"কাজের সময় চোট লাগলে আপনার সুপারভাইজারকে জানান। কর্মসংক্রান্ত আঘাতের জন্য ক্ষতিপূরণ দাবি করতে আরো সহায়তার প্রয়োজন হলে অনুগ্রহ করে বিষয়টি মিনিস্ট্রি অফ ম্যানপাওয়ারকে জানান।"

(কী ভাবে রিপোর্ট করতে হবে তা বিস্তারিতভাবে জানতে পৃ. ৪৭ দেখুন)

# সিঙ্গাপুরের আইন

সিঙ্গাপুরের আইন সিঙ্গাপুরীয় এবং বিদেশী উভয়ের প্রতিই সমান ভাবে প্রযোজ্য। সিঙ্গাপুরে কাজ করতে গেলে আপনাকেও সিঙ্গাপুরের আইন মেনে চলতে হবে। অন্যথায় আপনাকে শাস্তির সম্মুখীন হতে হবে। তা ছাড়া আপনার ওয়ার্ক পারমিটও বাতিল করা হবে এবং ভবিষ্যতে আপনাকে সিঙ্গাপুরে প্রবেশ করতে অনুমতি দেওয়া হবে না।

নিচে কিছু আইনভঙ্গের জরিমানার নমুনা দেওয়া হল:

| অপরাধ | শাস্তি |
|---|---|
| আবর্জনা ছড়ানো | • সর্বোচ্চ S$১,০০০ জরিমানা । |
| প্রকাশ্য জায়গায় প্রস্রাব করা | • সর্বোচ্চ S$১,০০০ জরিমানা । |
| জে-ওয়াকিং বা ট্র্যাফিক আইন না মেনে পথ চলা | • সর্বোচ্চ ৩ মাসের জেল অথবা সর্বোচ্চ S$১,০০০ জরিমানা । |
| প্রকাশ্যে মাতলামি | • সর্বোচ্চ ১ মাসের জেল অথবা সর্বোচ্চ S$১,০০০ জরিমানা । |
| পুলিশের কাছে মিথ্যা রিপোর্ট বা অভিযোগ করা | • সর্বোচ্চ ৬ মাস জেল অথবা সর্বোচ্চ S$১,০০০ জরিমানা অথবা দুটোই। |
| চুরি (চুরি বা খরিদ্দার সেজে দোকান থেকে জিনিস সরানো) | • ৩ থেকে ৭ বছর পর্যন্ত জেল অথবা জরিমানা অথবা দুটোই। |

| অপরাধ | শাস্তি |
|---|---|
| বাড়িতে ঢুকে চুরি | • সর্বোচ্চ ১০ বছর জেল অথবা জরিমানা অথবা দুটোই।<br>• সর্বোচ্চ ১৪ বছর জেল অথবা জরিমানা অথবা দুটোই, যদি এই বাড়িতে ঢুকে চুরি রাত্রে সংঘটিত হয়। |
| চোরাচালানিকৃত সিগারেট কেনা বা বেচা | • সর্বোচ্চ S$৫০০০ জরিমানা । দ্বিতী-য়বার বা তার পরেও দোষী সাব্যস্ত হলে অপরাধীর সর্বোচ্চ দুই বছর জেল হতে পারে। |
| অনুমোদিত সময়ের পরেও অবস্থান (Overstaying) | • সর্বোচ্চ ৬ মাস জেল অথবা সর্বোচ্চ S$৬,০০০ জরিমানা অথবা দুটোই।<br>• অনুমোদিত সময়ের পরে অবস্থানের মেয়াদ ৯০ দিন অতিক্রম করলে কমপক্ষে ৩ টি বেত্রাঘাত এবং সর্বোচ্চ ৬ মাস জেল। |
| অপরাধমূলক ভীতিপ্রদর্শন বা হুমকি দেওয়া | • সর্বোচ্চ ২ বছর জেল অথবা জরিমানা অথবা দুটোই।<br>• সর্বোচ্চ ৭ বছর বা তার বেশি জেল অথবা জরিমানা অথবা দুটোই, যদি মেরে ফেলার বা মারাত্মক আঘাত করার অথবা আগুনে সম্পত্তি ধ্বংস করার হুমকি দেওয়া হয়। |

| অপরাধ | শাস্তি |
|---|---|
| আঘাত করা | • সর্বোচ্চ ২ বছর জেল অথবা সর্বোচ্চ S$৫,০০০ জরিমানা অথবা দুটোই।<br>• সর্বোচ্চ ১০ বছর জেল এবং জরিমানা অথবা বেত্রাঘাত, যদি মারাত্মক আঘাত করা হয়ে থাকে। |
| বেআইনি জমায়েত বা মিছিল | • সর্বোচ্চ ২ বছর জেল। |
| দাঙ্গাহাঙ্গামা করা | • বেত্রাঘাত এবং সর্বোচ্চ ৭ বছর জেল।<br>• অস্ত্রশস্ত্র ব্যবহার করা হয়ে থাকলে বেত্রাঘাত এবং সর্বোচ্চ ১০ বছর জেল। |
| শ্লীলতাহানি | • সর্বোচ্চ ২ বছর জেল অথবা জরিমানা অথবা দুটোই।<br>• বেত্রাঘাত এবং সর্বোচ্চ ৫ বছর পর্যন্ত জেল যদি অপরাধটি যখন সংঘটিত হয় তখন আক্রান্ত ব্যক্তির বয়স ১৪ বছরের কম হয়। |

| অপরাধ | শাস্তি |
|---|---|
| ডাকাতি | • ২ থেকে ১০ বছর পর্যন্ত জেল এবং কমপক্ষে ৬ টি বেত্রাঘাত।<br>• ডাকাতি রাত্রে সংঘটিত হলে ৩ থেকে ১৪ বছর পর্যন্ত জেল এবং কমপক্ষে ১২ টি বেত্রাঘাত। |
| মাদক পাচার | • মৃত্যুদণ্ড, অথবা ২০ থেকে ৩০ বছর পর্যন্ত জেল এবং ১৫ টি বেত্রাঘাত। |
| হত্যা | • মৃত্যুদণ্ড। |



# সিঙ্গাপুরের স্থানীয় অভ্যাস

সিঙ্গাপুরের বিভিন্ন ধর্ম ও সাংস্কৃতিক অভ্যাস এসে একসঙ্গে মেশে। কাজের ও জীবনযাত্রার ক্ষেত্রে একটি সুষম সম্পর্ক বজায় রাখার জন্য এই বৈচিত্র্যগুলিকে সম্মান করা দরকার।



## আপনার প্রতিবেশীদের কথা বিবেচনা করুন

- নিজের জিনিসপত্র বোঝাই করে করিডর আটকে রাখবেন না (যেমন, বাক্স, কাচার কাপড়, সাইকেল)।
- রাত্রে জোরে জোরে কথা বলবেন না বা গানবাজনা চালাবেন না




## প্রকাশ্য বা সর্বজনীন জায়গায় যথাযথ আচরণ করুন

- আওয়াজের তীব্রতা কম রাখুন যাতে অন্যদের অসুবিধা না হয়।
- প্রকাশ্য জায়গায় লড়াই বা ঝগড়া করবেন না।
- প্রকাশ্য জায়গায় ঘুমোবেন না।

## সাম্প্রদায়িক স্বাস্থ্যবিধি পালন করুন

- আরশোলা, ইঁদুর ইত্যাদির উপদ্রব আটকাতে অবাঞ্ছিত খাবারদাবার জঞ্জালের পাত্রে ফেলুন এবং বাসনপত্র ভালো করে মাজুন।
- মশার বংশবিস্তার রোধ করতে বদ্ধ জমা জল সরিয়ে দিন।
- আপনার বিছানা পরিষ্কার রাখুন।
- টয়লেটগুলি নিয়মিত পরিষ্কার করুন ।



## ব্যক্তিগত স্বাস্থ্যবিধি পালন করুন

- নিঃশ্বাসে ও শরীরে দুর্গন্ধ এড়াতে রোজ দাঁত মাজুন ও চুল, মুখহাত ও নিয়মিত গোসল করুন।
- রোজ জামাকাপড় পালটান।
- যথাযথ পোশাক পরুন। সর্বজনীন জায়গায় শরীরের উপরের অংশ খালি রেখে ঘুরে বেড়াবেন না কারণ অন্যদের চোখে তা খারাপ লাগতে পারে।




## পথ নিরাপত্তা

- এগিয়ে আসতে থাকা যানবাহনের মুখোমুখি সাইকেল চালাবেন না।
- রাস্তার ধারের কার্বগুলির উপরে বসবেন না।
- সবসময় পেডেস্ট্রিয়ান (পথ চারী চলাচলের পথ) ক্রসিং ও ওভারব্রিজ ব্যবহার করুন ।



# সিঙ্গাপুরে চলাফেরা করা

একটি সুষ্ঠু সর্বজনীন পরিবহন ব্যবস্থা থাকার ফলে সিঙ্গাপুরে চলাফেরা করা খুবই সহজ। ট্যাক্সি, বাস ও মাস র‍্যাপিডট্র্যানজিট (এমআরটি) ট্রেন ব্যবস্থার সাহায্যে আপনি স্বচ্ছন্দে সিঙ্গাপুরে ঘুরে বেড়াতে পারেন।



## বাস




বাস রুটের বিশদ বিবরণ বাস স্টপ ও স্টেশনগুলিতে দেওয়া থাকে। আপনি সঠিক না জানলে বাস চালকের কাছে আপনার গন্তব্যস্থলের যথাযথ ভাড়া জেনে নিন।

## এমআরটি




মাস র‍্যাপিড ট্র্যানজিট (এমআরটি) একটি ট্রেন পরিসেবা যার স্টেশনগুলি গোটা সিঙ্গাপুরে ছড়ানো। চারটি প্রধান লাইন হল – ম্যারিনা বে থেকে জুরং ঈস্ট পর্যন্ত নর্থ-সাউথ লাইন, চাঙ্গি এয়ারপোর্ট/পাসির রিস থেকে জু কুন পর্যন্ত ঈস্ট-ওয়েস্ট লাইন, হার্বার ফ্রন্ট থেকে পুঙ্গল পর্যন্ত নর্থ-ঈস্ট লাইন এবং ধোবী ঘাট থেকে মেরিমাউন্ট পর্যন্ত সার্কেল লাইন ।

ট্রেনগুলি রোজ ০৫৩০ থেকে ০০৩০ পর্যন্ত চলে। আপনি কতদূর যাবেন তার উপর ভাড়া নির্ভর করে যা $১.০০ থেকে শুরু ও সর্বোচ্চ $২.৩০ পর্যন্ত হয়।

আপনি একটি স্টোরড-ভ্যালু ezlink কার্ডের সাহায্যেও আপনার এমআরটি ও বাসের ভাড়া মেটাতে পারেন যেটি অধিকাংশ এমআরটি স্টেশন এবং বাস ইন্টারচেঞ্জেই কিনতে পাওয়া যায় এবং পুনর্মূল্যায়ন করতে পারা যায়।

## ট্যাক্সি




স্থানীয় রাস্তায় ২৩,০০০-এর বেশি ট্যাক্সি চলে যেগুলি অধিকাংশ রাস্তাতেই ২৪ ঘণ্টাই পাওয়া যায়।

# কোনো সাহায্যের প্রয়োজন?

আপনি যদি আপনার নিয়োগসংক্রান্ত কোনো সমস্যার সম্মুখীন হন তাহলে Ministry of Manpower (MOM) –এ **6438 5122**(৬৪৩৮ ৫১২২) **এই নম্বরে ফোন করতে পারেন বা আমাদের সঙ্গে 18 Havelock Road Singapore 059764** এই ঠিকানায় যোগাযোগ করতে পারেন।

## এজেন্সী ফি-এর সীমা

যদি আপনার কাছে রসিদ অথবা চুক্তি থাকে যা থেকে প্রমাণ হয় হয় যে সিঙ্গাপুর এমপ্লয়মেন্ট এজেন্সী আপনার কাছ থেকে সর্বোচ্চ সীমা থেকে বেশি ফি নিয়েছে, তবে অনুগ্রহ করে আপনার দাবী MOM -কে জানান এই টেলিফোন নম্বরে: 6438 5122(৬৪৩৮ ৫১২২) অথবা MOM-এর ফরেন ম্যানপাওয়ার ম্যানেজমেন্ট ডিভিশনকে জানান এই ঠিকানায়: **120 Kim Seng Road Singapore 239436**.

## ওয়ার্ক পারমিটের বৈধতা যাচাই করা

যদি আপনি আপনার ওয়ার্ক পারমিটের বৈধতা যাচাই করতে চান অথবা দেখতে চান যে আপনার ওয়ার্ক পারমিট এখনও বৈধ আছে কিনা, আপনি MOM -কে যোগাযোগ করেন এই টেলিফোন নম্বরে: 6438 5122(৬৪৩৮ ৫১২২)। আপনার ওয়ার্ক পারমিট নম্বর প্রবেশ করান এবং আপনার ইন-প্রিন্সিপাল অ্যাপ্রুভাল চিঠিতে দেওয়া আবেদনের তারিখটি প্রবেশ করান।

## বকেয়া মাইনে দাবি এবং নিয়োগসংক্রান্ত পাওনা

যদি নিয়োগকর্তার বিরুদ্ধে আপনার বকেয়া মাইনে এবং/বা নিয়োগসংক্রান্ত পাওনার কোনো দাবি থাকে, তাহলে আপনি MOM-এর Labour Relations and Workplaces Division -এ ১৮ Havelock Road Singapore 059764 ঠিকানায় যোগাযোগ করতে পারেন।

## কাজের জায়গায় আঘাত লাগার ক্ষতিপূরণ

আপনার কাজের জায়গায় আঘাত লাগার ক্ষতিপূরণের দাবি সংক্রান্ত কোনো সাহায্য দরকার হলে MOM-এর Work Injury Compensation Department -এ ১৮ Havelock Road Singapore 059764 ঠিকানায় যোগাযোগ করতে পারেন।






## অনিরাপদ কাজের জায়গা ও কাজের অভ্যাস

আপনি যদি কোনো নিরাপদ নয় এমন কাজের জায়গা /বিপজ্জনক কার্যকলাপ লক্ষ্য করে থাকেন বা আপনাকে নিরাপদ নয় এমন ভাবে কাজ করতে বলা হয়, তবে আপনি যোগাযোগ করতে পারেন **OSH Hotline-**এ এই নম্বরে : **6317 1111**(৬৩১৭ ১১১১).

## বেআইনি নিয়োগ/প্রয়োগ/ অবাঞ্ছিত বসবাসের পরিবেশ

যদি আপনাকে ভিন্ন কোনো কাজ বা অন্য নিয়োগকর্তার অধীনে কাজ করতে বলা হয়, অথবা অবাঞ্ছিত বসবাসের/কাজের পরিবেশের সম্মুখীন হতে হয় তবে আপনি এই ঠিকানায় MOM-এর Foreign Manpower Management Division-এ যোগাযোগ করতে পারেন: 120 Kim Seng Road Singapore 239436।

## ব্যক্তিগত হিত ও নিরাপত্তা

যদি আপনি আপনার ব্যক্তিগত হিত ও নিরাপত্তা সম্বন্ধে দুশ্চিন্তাগ্রস্ত থাকেন, তবে আপনাকে **999**(৯৯৯) নম্বরে পুলিশের সঙ্গে বা আপনার দূতাবাসের সঙ্গে যোগাযোগ করতে পরামর্শ দেওয়া হচ্ছে।

# কিছু দরকারি টেলিফোন নম্বর

আপনার কোনো সাহায্য দরকার হলে নিম্নলিখিত  নম্বরে ফোন করুন।

## হেল্পলাইন



| | |
|---|---|
| পুলিশ | টেলি: 999 (৯৯৯) |
| অ্যাম্বুলেন্স | টেলি: 995 (৯৯৫) |
| মাইগ্র্যান্ট ওয়ার্কার্স সেন্টার | টেলি: 6536 2692 (৬৫৩৬ ২৬৯২) |
| Ministry of Manpower | টেলি: 6438 5122 (৬৪৩৮ ৫১২২) |
| সামারিটানস অফ সিঙ্গাপুর (SOS) | টেলি: 1800-2214 444 (১৮০০-২২১৪ ৪৪৪) |
| হিউম্যানিটেরিয়ান অর্গ্যানাইজেশন ফর মাইগ্রেশন ইকনমিক্স (HOME) | |
| HOME হটলাইন মহিলা কর্মীদের জন্য (২৪-ঘণ্টা) | টেলি: 6341 5525 (৬৩৪১ ৫৫২৫) |
| HOME হটলাইন পুরুষ কর্মীদের জন্য (২৪-ঘণ্টা) | টেলি: 6341 5535 (৬৩৪১ ৫৫৩৫) |
| ট্র্যানজিয়েন্ট ওয়ার্কারস কাউন্ট টু (TWC2) | টেলি: 1800-888 1515 (১৮০০-৮৮৮ ১৫১৫) |

# বিভিন্ন দূতাবাস

| | |
|---|---|
| **High Commission of the People's Republic of Bangladesh**<br>হাই কমিশন<br>গণ প্রজাতন্ত্রী বাংলাদেশ সরকার | **Tel: 6255 0075** |
| **Embassy of the People's Republic of China**<br>中华人民共和国大使馆 | **Tel: 6412 1900** |
| **High Commission of India**<br>இந் திய உயர் ஆணையகம் | **Tel: 6238 2550** |
| **Embassy of the Republic of Indonesia**<br>Kedutaan Besar Republik Indonesia | **Tel: 6737 7422** |
| **Malaysian High Commission**<br>Suruhanjaya Tinggi Malaysia | **Tel: 6235 0111** |
| **Embassy of the Republic of the Union of Myanmar**<br>သံရုံး၊ မြန်မာနိုင်ငံ | **Tel: 6735 1672** |
| **High Commission of the Islamic Republic of Pakistan**<br>اسلامی جمہوریہء پاکستان کا ہائی کمیشن | **Tel: 6737 6988** |
| **Embassy of the Republic of Philippines**<br>Embahada ng Republika ng Pilipinas | **Tel: 6737 3977** |
| **High Commission of the Democratic Socialist Republic of Sri Lanka**<br>ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී<br>ජනරජයේ මහ කොමසාරිස් | **Tel: 6254 4595** |
| **Royal Thai Embassy**<br>สถานเอกอัครราชทูตไทย | **Tel: 6737 2644** |

সিঙ্গাপুরে আপনার দেশের দূতাবাসের কাছে নথিভুক্ত হন। প্রয়োজনে আপনার দূতাবাস আপনাকে সাহায্য করবে।

# குறிப்புகள் / মন্তব্য

# குறிப்புகள் / මන්තව්‍ය